பின்னால் இருந்து இயக்குவது யார்?

உங்களை பின்னால் இருந்து யாரோ இயக்குகிறார்கள் என்று கூறப்படுகிறதே என்று நிருபர்கள் கேட்டதற்கு, 'என்னை யாரும் இயக்க முடியாது. நான் 46 ஆண்டு காலம் 95 ஆயிரம் கிராமங்களுக்கு பயணித்து உள்ளேன். உங்கள் ஆதரவோடு பயணிக்கிறேன். இன்னும் எத்தனை வருடம் பயணிப்பேன் என்று எனக்கே தெரியாது. ஆனால் உங்களுக்கு தெரியும், உங்களின் வாழ்த்துக்களோடு தொடர்ந்து நான் பயணிப்பேன், அது வெற்றி பயணமாக அமையும்' என்று ராமதாஸ் பதில் அளித்தார்.

இருக்கும் இருக்காது... வருவாங்க போவாங்க... செல்லும் செல்லாது... நடக்கும் நடக்காது...

புரியாத புதிராய் பேசிய ராமதாஸ்

வியாழக்கிழமை புதிய சஸ்பென்ஸ்

அன்புமணி குறித்த கேள்விக்கு புரியாத புதிராய் பதிலளித்த ராமதாஸ், வியாழக்கிழமை சொல்வதாக புதிய சஸ்பென்ஸ் வைத்து உள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அடுத்த தைலாபுரம் தோட்டத்தில் பாமக நிறுவனர் ராமதாஸ் நேற்று அளித்த பேட்டி விவரம் வருமாறு:

கேள்வி: அன்புமணி நான்தான் தலைவர் என்றும், உங்களால் நீக்கப்பட்ட நிர்வாகிகளை தொடர்ந்து செயல்படும்படி கூறியுள்ளார். மேலும் பொதுக்குழு கூடி தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் நான், என்னை நீக்க யாருக்கும் அதிகாரம் இல்லை என்றும் கூறியுள்ளார். பாமகவின் சட்ட விதிகள் என்ன?

பதில்: சட்ட விதிகளை நான் பார்க்கவில்லை, பார்த்துவிட்டு நாளை சொல்கிறேன்.

கேள்வி: நீங்கள் நீக்கிய அனைவருக்கும் மீண்டும் அன்புமணி பதவி அளிக்கிறாரே?

பதில்: இது ஒரு குடும்பத்தில், கட்சியில், நாட்டில் நடப்பது தான். எனவே அதை பெரிதுபடுத்த வேண்டாம். நானும் அதை பெரிதாக்கவில்லை.

கேள்வி: உறுப்பினர் அட்டையை உங்கள் புகைப்படத்துடன் அளித்து வருகிறாரே?

பதில்: இதுகுறித்து வியாழக்கிழமை சந்திப்பில் தெரிவிக்கிறேன். அப்போது கலந்துரையாடுவோம்.

கேள்வி: சமூக ஊடக பேரவை ஆலோசனை கூட்டத்தில் அன்புமணியை முதல்வர் வேட்பாளராக முன்னிறுத்தி பேசினீர்கள். அடுத்த நாள் அன்புமணி மீது அடுக்கடுக்காக குற்றச்சாட்டுகளை முன் வைத்தீர்கள். இதில் சில முரண்பாடு தெரிகிறதே?

பதில்: இதில் முரண்பாடு இல்லை. நீங்கள் ஏதாவது கேள்வி எழுப்பி இருப்பீர்கள், நான் சொல்லி இருப்பேன்.

கேள்வி: கட்சியிலிருந்து நிர்வாகிகளை நீக்கும் அதிகாரம் ராமதாசுக்கு இல்லை என்று அன்புமணி தெரிவித்துள்ளார். மேலும் திலகபாமா தொடர்ந்து பதவியில் நீடிப்பார் என்றும் கூறியுள்ளார். அன்புமணி நீக்கப்படுவாரா?

பதில்: இதேபோல் தேவை இல்லாத கேள்விகள் கேட்க வேண்டாம். திலகபாமாவை நீக்கியது, அந்த பதவியில் ஒரு சிறுபான்மையினரை நியமிக்க வேண்டும். அதனால் ஒரு முஸ்லிம் அல்லது கிறிஸ்டியன் நியமிக்க வேண்டும். இடையில் அந்த பெண்மணியை நியமித்தோம். மீண்டும் ஒரு முஸ்லிமை நியமிப்பதற்காக திருப்பூரை சேர்ந்த மன்சூர் என்பவரை நியமித்துள்ளேன். ஏற்கனவே அவர் பொருளாளராக இருந்தவர். முதல் முதலாக கட்சி துவங்கும்போது பெட்ரோலியத்துறை அமைச்சராக இருந்த பொன்னுசாமி என்னுடன் உள்ளார். என்னை சந்திக்க வந்துள்ளார். அந்த காலத்திலேயே சிறுபான்மையினருக்கு பொருளாளர் பதவி கொடுத்தோம். இடையில் இந்த நிகழ்வு நடந்துள்ளது. தற்போது மீண்டும் பொருளாளர் பதவி சரி செய்யப்பட்டுள்ளது.

கேள்வி: அதை அன்புமணி செல்லாது என்று கூறி உள்ளாரே?

பதில்: செல்லும் செல்லாது, செல்லாது செல்லும் இதை திருப்பி திருப்பி படித்துக்கொள்ள வேண்டியது தான்.

கேள்வி: நேற்றிலிருந்து தான் எனக்கு சுதந்திரம் கிடைத்துள்ளது என்று அன்புமணி கூறியுள்ளாரே?

பதில்: சுதந்திரமாக செயல்படுவது, சுதந்திரமாக எண்ணுவது ஒரு மனிதனுடைய கடமை. அது அவருடைய கருத்து.

கேள்வி: மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தை நீங்கள் கூட்டியும் பெரும்பாலானோர் வரவில்லை. ஆனால் அன்புமணி கூட்டிய கூட்டத்துக்கு சென்றுள்ளனர். கட்சியினுடைய பெரும்பாலான நிர்வாகிகள் அன்புமணி பக்கம் என்ற நிலைப்பாடு எழுந்துள்ளதே?

பதில்: வருவார்கள் போவார்கள், மீண்டும் வருவார்கள் போவார்கள், ஒருவர் வருவார், இன்னொருத்தர் போவார். மாவட்ட செயலாளர் செயல்பாட்டை பார்த்து மறுபடியும் மாற்றுவோம். வேறொருவர் வருவார். இது அனைத்து கட்சியிலும் நடைபெறுவது தான்.

கேள்வி: மாறி மாறி நிர்வாகிகளை மாற்றம் செய்வதால் கட்சியில் குழப்பம் ஏற்பட்டுள்ளதே?

பதில்: ஒரு குழப்பமும் இல்லை. எல்லாம் நாமாக அப்படி நினைத்து கொள்ள வேண்டியதுதான்.

கேள்வி: பொதுக்குழு எப்போது கூடும்?

பதில்: இன்னும் அதைப்பற்றி யோசிக்கவில்லை.

கேள்வி: கடந்த அதிமுக கூட்டணியில் உங்களுக்கு ராஜ்யசபா சீட் வழங்கப்பட்டது. இப்போது கட்சியில் நிலவும் குழப்பம் காரணமாக அந்த வாய்ப்பு பறிபோய்விட்டதாக சொல்லி நிர்வாகிகள், தொண்டர்கள் வருத்தம் தெரிவிக்கிறார்களே?

பதில்: அது என் காதுக்கு வரவில்லை, நீங்கள் சொல்லித்தான் தெரிகிறது.

கேள்வி: ஒருவேளை ஒற்றுமையாக இருந்திருந்தால் அந்த வாய்ப்பு கிடைத்திருக்குமா?

பதில்: பதவி வரும், போகும். போகும் வரும். வரும்போது வரவேற்போம், போகும்போது அடுத்த முறை பார்த்துக்கொள்ளலாம் என்று அந்த பதவிக்கு சொல்லி விடுவோம்.

கேள்வி: அடுத்தகட்டமாக நிர்வாகிகள் மாற்றம் தொடருமா?

பதில்: நிர்வாகிகள் தொடருவார்கள். மற்றவர்கள் மாற்றப்படுவார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின்போது பாமக கவுரவ தலைவர் ஜி.கே.மணி, வன்னியர் சங்க மாநில தலைவர் பு.த.அருள்மொழி, முன்னாள் அமைச்சர் பொன்னுசாமி உடனிருந்தனர்.

பாமகவில் விரைவில் அதிசயம் நடக்கும்

கேள்வி: நீங்கள் அன்புமணியை சந்தித்தால் எல்லாம் சரி ஆகிவிடும் என்று கூறப்படுகிறதே?

பதில்: உலகத்தில் எவ்வளவோ அதிசயங்கள் நடைபெறும். எது, எப்போது நடைபெறும் என்று யாராலும் கணிக்க முடியாது.

கேள்வி: உங்கள் மகனை சந்திப்பதே அதிசயம் என்று சொல்கிறீர்களா?

பதில்: பொதுவாக உலக நியதியை சொன்னேன்.

கேள்வி: இதற்கு தீர்வு தான் என்ன?

பதில்: நீங்கள் தீர்வு சொன்னால் அதன் அடிப்படையில் யோசிக்கிறேன்.

கேள்வி: நீங்கள் இருவரும் அமர்ந்து பேசினால் நிரந்தர தீர்வு கிடைக்கும் என்று கூறப்படுகிறதே?

பதில்: எல்லாவற்றுக்கும் தீர்வு உண்டு. தீர்வு இல்லாமல் எதுவும் இல்லை. நீங்கள் விரும்புவதால் கண்டிப்பாக தீர்வு கிடைக்கும்.

மூத்த மகள் ஒரு மணி நேரம் சந்திப்பு

ராமதாசின் மூத்த மகள் காந்திமதி நேற்று காலை தைலாபுரம் தோட்டத்துக்கு வந்தார். தொடர்ந்து ராமதாசுடன் சுமார் ஒரு மணி நேரம் பேசினார். அதன்பின்னர் ராமதாஸ் செய்தியாளர்களை சந்தித்தார். அன்புமணி குறித்து பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்த ராமதாஸ் நேற்று சிறிது மாற்றத்துடன் காணப்பட்டார். செய்தியாளர்களின் அனைத்து கேள்விக்கும் அவர் மழுப்பலாக பதிலளித்தார். அன்புமணி குறித்து எந்தவித குற்றச்சாட்டும் அளிக்கவில்லை. மகளின் கோரிக்கையை ஏற்று நேற்று வெளியிட இருந்த முக்கிய அறிவிப்பும் நிறுத்தப்பட்டு இருக்கலாம் என்று பாமக வட்டாரத்தில் பேசப்பட்டு வருகிறது.

ஆக.10ல் பூம்புகாரில் வன்னியர் சங்க மகளிர் பெருவிழா அன்புமணிக்கும் அழைப்பு

பாமக நிறுவனர் ராமதாஸ் நேற்று அளித்த பேட்டியில், வன்னியர் சங்கம் சார்பில் பல ஆண்டுகளாக மகளிர் மாநாடு நடத்துவது வழக்கம். பூம்புகாரில் மகளிர் பெருவிழா மாநாடு இடையில் சில ஆண்டு காலமாக நடத்தப்படவில்லை. அரசு அந்த இடத்தை புதுப்பித்து அழகுப்படுத்தினார்கள். இந்த ஆண்டு மகளிர் சங்க மாநாடு பூம்புகாரில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

வருகின்ற ஆகஸ்ட் 10ம் தேதி, தமிழ் மாதத்தில் ஆடி 25 அன்று மாலை 4 மணியளவில் இந்த மாநாடு நடைபெறும். இதில் கலந்து கொள்ள உங்களுக்கு அழைப்பு விடுக்கிறேன். பூம்புகார் மகளிர் மாநாட்டுக்கு குழு தலைவராக வன்னியர் சங்க தலைவர் பு.த.அருள்மொழி இருப்பார். இதற்காக பல குழுக்கள் உருவாக்கப்படும். அதை அவர் வழி நடத்துவார். நானும் ஆலோசனை வழங்குவேன் என்றார்.

கேள்வி: மகளிர் மாநாட்டுக்கு அன்புமணிக்கு அழைப்பு இருக்குமா?

பதில்: எல்லாருக்கும் அழைப்பு உண்டு. எல்லாரும் கலந்து கொள்ளலாம். யாரையும் கலந்து கொள்ள வேண்டாம் என்று சொல்லவில்லை. சொல்லப் போவதும் இல்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

நிரந்தரமாக இங்கு யாரும் இருக்க முடியாது

பொதுக்குழு தேர்வு செய்பவருக்கே கட்சியில் அதிகாரம்

– ராமதாசுக்கு அன்புமணி பதிலடி

பொதுக் குழு தேர்வு செய்பவருக்கே கட்சியில் அதிகாரம். நிரந்தரமாக இங்கு யாரும் இருக்க முடியாது என நிர்வாகிகள் கூட்டத்தில் அன்புமணி பேசினார்.

சென்னை கானத்தூரில் உள்ள தனியார் விடுதியில் பாமக தென் மாவட்ட மற்றும் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து நிலை பொறுப்பாளர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நேற்று 3வது நாளாக நடந்தது. பாமக தலைவர் அன்புமணி தலைமை வகித்தார். கூட்டத்தில், மதுரை, விருதுநகர், சிவகங்கை, தேனி, திண்டுக்கல், ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி உள்ளிட்ட தென் மாவட்டங்களைச் சேர்ந்த அனைத்து நிலை பொறுப்பாளர்களும் கலந்து கொண்டனர். அதேபோல், நீலகிரி, கோவை, திருப்பூர், கரூர் உள்ளிட்ட மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த பொறுப்பாளர்களும் பங்கேற்றனர்.

கூட்டத்தில், பாமக தலைவர் அன்புமணி பேசியதாவது:

கடந்த இரண்டு நாட்களாக பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த நிர்வாகிகளை சந்தித்து புதிய உறுப்பினர்கள் சேர்க்கை மற்றும் உறுப்பினர் அட்டை புதுப்பித்தல் பணி தொடங்குவது குறித்து ஆலோசனை நடத்தி உள்ளோம். இன்றைக்கு அது குறித்து உங்களிடமும் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் மற்றும் ஒன்றிய அளவில் பொதுக்குழுவை கூட்டி உறுப்பினர் சேர்க்கை பணியை தொடங்க வேண்டும்.

மூன்று வாரத்திற்குள் உறுப்பினர் சேர்க்கை மற்றும் புதுப்பித்தல் பணி நிறைவடைந்து எனக்கு அனுப்ப வேண்டும். முப்பதாயிரம் ஐம்பதாயிரம் ஒரு லட்சம் உறுப்பினர்களை சேர்ப்பதை விட, கட்சிக்காக உழைக்கக் கூடிய, கட்சியில் உண்மையான உறுப்பினர்களை சேர்க்க வேண்டும். தென் மாவட்டங்கள் மற்றும் மேற்கு மாவட்டத்தில் இருந்து வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் குறைந்தபட்சம் 5 சட்டமன்ற உறுப்பினர்களை நீங்கள் அனுப்ப வேண்டும்.

377 சமுதாயங்கள் சமூக நீதியை அனுபவித்துக் கொண்டிருக்கிறது. ஆனால், உண்மையிலேயே எந்த சமுதாயத்திற்கு கிடைக்கிறது கிடைக்கவில்லை என்பதை சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தினால் தான் தெரியவரும்.

வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் தமிழகத்தில் கூட்டணி ஆட்சி தான் அமையும். அதுவும் பாமக இருக்கிற கூட்டணி தான் வெற்றி பெறும். இதனைத் தொடர்ந்து வரும் சட்டமன்றத் தேர்தலில் பாமக தலைமையிலான ஆட்சி அமையும். தென் மாவட்டங்களில் ஒரு பிரச்னை என்றால் மருத்துவர் அய்யா அங்கு ஓடோடி வருவார். இப்போது இருக்கின்ற சின்னச் சின்ன சிறிய பிரச்னைகள் குழப்பங்கள் எல்லாம் சரியாகிவிடும். இங்கு பேசும்போது, ஒருவர் நிரந்தரத் தலைவர் அன்புமணி என்று சொன்னார். இங்கு யாரும் நிரந்தரம் கிடையாது. பாமக ஒரு ஜனநாயக கட்சி. யார் தலைவராக வரவேண்டும் என்பதை பொதுக்குழு தான் தீர்மானிக்கும்

பாமகவில் நிரந்தர தலைவர் யாரும் கிடையாது. பாமக ஒரு ஜனநாயக கட்சி. பொதுக் குழு தேர்வு செய்பவருக்கே கட்சியில் அதிகாரம். நிரந்தரமாக இங்கு யாரும் இருக்க முடியாது. நான் தான் பெரியவன் என்ற எண்ணம் இல்லை. என்னை நீங்கள் தேர்வு செய்தீர்கள். ஒரு தொண்டனாக செயல்படுகிறேன்.

பாமக எல்லா மதத்திற்கும் சார்ந்த கட்சி. நம்மிடம் தெளிவான கொள்கை இருக்கிறது. நீங்கள் வேகமாக பண்ணுங்கள். எதுவாக இருந்தாலும் உங்களுடன் நான் இருக்கிறேன். தைரியமாக பண்ணுங்கள். உங்களுக்கு என்னை பத்தி நன்றாக தெரிந்திருக்கும். நான் உங்களுக்கு கட்சியிலும் சரி, வெளியிலும் சரி எந்த பிரச்னை வந்தாலும் நான் நன்றாக பார்த்துக் கொள்வேன். கடந்த 3 நாட்களில் நமக்கு நல்ல டீம் அமைந்திருக்கிறது.

இவ்வாறு பாமக தலைவர் அன்புமணி பேசினார்.

ராமதாசுக்கே அதிகாரம் வன்னியர் சங்க தலைவர் அருள்மொழி உறுதி

தைலாபுரம் இல்லத்தில் பாமக நிறுவனர் ராமதாசை வன்னியர் சங்க தலைவர் பு.தா.அருள்மொழி, பாமக கவுரவ தலைவர் ஜி.கே மணி, முன்னாள் ஒன்றிய அமைச்சர் பொன்னுசாமி, முன்னாள் எம்.எல்.ஏ திருக்கச்சூர் ஆறுமுகம், தஞ்சை வடக்கு மாவட்ட செயலாளர் ம.க.ஸ்டாலின் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் நேற்று சந்தித்து பேசினர். ராமதாசை சந்தித்த பின் பேட்டியளித்த வன்னியர் சங்க தலைவர் புதா. அருள்மொழி கூறுகையில், 'அன்புமணி தானே பாமகவின் தலைவர், ராமதாஸ் வழிகாட்டி என கூறுவது வரவேற்கதக்கது. ஆனால், அப்படியே நடத்திட்டு வந்தா நல்லா இருக்கும். அன்புமணி செயல் தலைவர், பாமகவின் தலைவராக ராமதாஸ் செயல்படுவதாக ஏற்கனவே ராமதாஸ் அறிவித்து விட்டார் ஆனாலும் விடாமல் தன்னை தான் தலைவர் என்று அன்புமணி சொல்லி வருகிறார். வன்னியர் சங்கத்தை பொறுத்தவரை ராமதாஸ் தான் எங்களுக்கு தலைவர். பாமகவில் உச்ச பட்ச அதிகாரம் ராமதாசுக்கு தான் உள்ளது. பொதுக்குழு கூட்டுவது தொடர்பாக இதுவரை பேசவில்லை. பொதுக்குழுவை ராமதாஸ் விரைவில் கூட்டுவார்' என்றார்.

பாமக பொதுக்குழுவில் தேர்வு செய்யப்பட்ட

அன்புமணி தலைவர் பதவிக்காலம் மே 28ம் தேதியுடன் முடிந்தது

ராமதாஸ் உற்சாகம்

தந்தை, மகன் மோதலால் பாமக இரண்டாக உடையும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் கட்சியில் யாருக்கு அதிகாரம் என்ற நிலையை நிறுவனர் ராமதாசும், மற்றொரு பக்கம் தலைவர் அன்புமணியும் சட்ட வல்லுநர்களுடன் ஆலோசனை நடத்தி வருகின்றனர். இதனிடையே கட்சித் தலைவராக நியமிக்கப்பட்ட அன்புமணியின் பதவிக் காலம் முடிந்து விட்டதாக ராமதாஸ் ஆதரவாளர்கள் பரபரப்பு தகவல்களை சமூக வலைதளங்களில் பரப்பி வருகின்றனர்.

கடந்த 2022 மே 28ம் தேதி பொதுக்குழு கூட்டத்தில் பாமக தலைவராக நியமிக்கப்பட்ட அன்புமணியின் 3 ஆண்டு பதவிக்காலம் கடந்த மே 28ம் தேதியுடன் முடிவடைந்து விட்டது. இதனையடுத்து ஆடிட்டர் மற்றும் சட்ட வல்லுநர்களுடன் ராமதாஸ் ஆலோசனை நடத்தினார். அப்போது கட்சி தலைவர் பதவி காலாவதியான பிறகு தானாகவே அதிகாரம் அனைத்தும் நிறுவனரான ராமதாசின் கைகளுக்கு வந்துவிட்டதாக தெரிவித்தார்களாம். மேலும் இனிமேல் பொதுக்குழுவை கூட்டித்தான் புதிய தலைவரை தேர்வு செய்து முறைப்படி தேர்தல் கமிஷனுக்கு அறிவிக்க வேண்டும் என்றும் ஆலோசனை வழங்கி உள்ளனர்.

அதன்பிறகு நிறுவனரான தனக்கு தான் கட்சியின் அனைத்து அதிகாரமும் உள்ளது என்று உற்சாகம் அடைந்துள்ள ராமதாஸ் அதிரடியாக கட்சி நிர்வாகிகளை நீக்கியும் புதிய நிர்வாகிகளை நியமித்தும் வருகிறார்.

இதுகுறித்து அக்கட்சி வட்டாரங்கள் கூறுகையில், 'ஒவ்வொரு கட்சிக்கும் தலைவர், பொதுச்செயலாளர் என்று சட்ட விதிகள் மாறுபடும். ஆனால், பாமகவில் கட்சியை தொடங்கிய நிறுவனருக்கு தான் அனைத்து உரிமைகளும், அதிகாரமும் உண்டு. தலைவர் நியமனம் முதல் நிறுவனருக்கு தான் உரிமை உள்ளதாக தெரிவித்துள்ளனர்.

ஆனால் பொதுக்குழு தான் இந்த நிறுவனர், தலைவர் பதவியை தேர்ந்தெடுக்கும் அதிகாரம் இருப்பதால் ராமதாசும், அன்புமணியும் தனது ஆதரவாளரை மாறி, மாறி நியமித்து வருகின்றனர். விரைவில் பொதுக்குழு கூட்டி ராமதாஸ் புதிய நிர்வாகிகளை அறிவிக்கப் போவதாக கூறிய நிலையில் அன்புமணியோ சென்னையில் தனது ஆதரவாளர்களை கூட்டி தன்னை மீண்டும் தலைவராக காய் நகர்த்தி வருகிறார்' என்றனர்.

கட்சியை விட்டு வெளியே சென்றவர்களை சேர்க்க திட்டம்

பாமக நிறுவனர் ராமதாஸ் கடந்த காலங்களில் கட்சியிலிருந்து வெளியே சென்ற மூத்த நிர்வாகிகளை மீண்டும் பாமகவில் இணைத்து கட்சியை பலப்படுத்தவும், அன்புமணிக்கு பதிலடி கொடுக்கவும் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. அதன்படி பாமகவில் காடுவெட்டி குருவுக்கு அடுத்தபடியாக கட்சியை சிறப்பாக வழி நடத்திய வேல்முருகன் தனியாக கட்சி தொடங்கி செயல்படுத்தி வருகிறார். அவரை மீண்டும் கட்சிக்குள் கொண்டு வந்து முக்கிய பதவி கொடுக்கவும் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதுகுறித்த தகவல்களும் கடந்த சில நாட்களாக சமூக வலைதளங்களில் பரவி வருகின்றன. விரைவில் இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பும் அடுத்த கட்ட காய் நகர்த்தலிலும் ராமதாஸ் வட்டாரத்தில் ஏற்படுத்தலாம் என்று கூறப்படுகிறது.

பொதுக்குழுவை கூட்டினால் மீண்டும் தலைவராவாரா?

பொதுக்குழுவை கூட்டுவதற்கு பொதுக்குழு நிர்வாகிகளுக்கு கட்சியின் நிறுவனர் அழைப்பு விடுக்க வேண்டும். பாமக பொதுக்குழு கூடுமா என்று ராமதாசிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியபோது இதுகுறித்து இன்னும் முடிவு எடுக்கவில்லை என்று தெரிவித்தார். பாமகவில் உச்சபட்ச அதிகாரம் நிறுவனருக்கே உள்ளது என்று வன்னியர் சங்க மாநில தலைவர் பு.தா.அருள்மொழி தெரிவித்துள்ளார்.

அதன்படி பாமகவில் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் நிறுவனரின் உத்தரவுக்கே அதிக அதிகாரம் உள்ளதாக பாமக விதிகளில் உள்ளதாகவும், இதை ராமதாஸ் அப்படியே வைத்துள்ளதாகவும், இதனால் தான் இதுபோன்று புதிய நிர்வாகிகளை அவர் நியமிக்க காரணம் என்றும், முகுந்தன் நியமனம் செல்லாது என அப்போது பொதுக்கூட்டத்தில் அன்புமணி தெரிவிக்கவில்லை என்றும் பாமக வட்டாரம் கூறுகின்றது. மேலும் கடந்த ஏப்ரல் 10ம் தேதி பாமக செயல் தலைவராக அன்புமணி அறிவிக்கப்பட்ட போதும் தேர்தல் ஆணையத்தில் தலைவராக அன்புமணியே உள்ளார். அதன்படி தேர்தல் ஆணையத்தில் தலைவரை மாற்ற ராமதாஸ் பொதுக்குழுவை கூட்டி பெரும்பான்மையை நிரூபித்தாக வேண்டும். இருந்த போதிலும் பெரும்பாலான நிர்வாகிகள் அன்புமணி வசமே உள்ளதால் தற்போது பொதுக்குழு கூடினாலும் அன்புமணி தலைவராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவார். இதனை மாற்றவே புதிய நிர்வாகிகளை ராமதாஸ் நியமித்து வருவதாக அரசியல் வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது.

தந்தை-மகன் பிரச்னையால் மனஉளைச்சல், உடல்நலக்குறைவு

பாமக எம்எல்ஏ திடீர் அட்மிட்

தந்தை-மகன் பிரச்னையால் கடந்த 30ம் தேதி, திண்டிவனம் தைலாபுரத்தில் பாமக நிறுவனர் ராமதாசை, சேலம் மேற்கு தொகுதி எம்எல்ஏ அருள் சந்தித்து எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்யப் போவதாக கூறினார். பின்னர் வெளியே வந்த அவர் எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்ய வேண்டாம் என்று ராமதாஸ் கூறிவிட்டதாக தெரிவித்தார். மேலும் பாமக நிர்வாகிகளை நீக்க ராமதாசுக்கு அதிகாரம் உள்ளது என்றும் பேட்டியளித்தார். இந்நிலையில் நேற்று முன்தினம் காலை, திடீரென அவருக்கு உடல்நிலை பாதிப்பு ஏற்பட்டது. இதனால் அவர் சேலம் அஸ்தம்பட்டியில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு டாக்டர்கள் மருத்துவ பரிசோதனை செய்து சிகிச்சை அளித்தனர். தொடர்ந்து, 2வது நாளாக நேற்றும் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

இதுகுறித்து கேட்ட போது, அருள் எம்எல்ஏ கூறுகையில், 'கடந்த சில நாட்களாக கட்சிக்குள் நடக்கிற செயல்களால் கடுமையான மனஉளைச்சலுக்கு ஆளாகியுள்ளேன். நேற்று முன்தினம் காலை, ரத்த அழுத்தம் அதிகமானதால் உடல்நிலை பாதிக்கப்பட்டது. அதற்காக மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்று வருகிறேன். தற்போது ஓரளவுக்கு உடல்நிலை சீராக இருக்கிறது. இருந்தாலும் டாக்டர்கள் தொடர் சிகிச்சையில் இருக்க அறிவுறுத்தியுள்ளனர். உடல்நிலை பாதிப்பு காரணமாக சென்னையில் நடக்கும் அன்புமணி ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொள்ள முடியவில்லை. நான் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதை அறிந்த ராமதாஸ், அன்புமணி ஆகிய இருவரும் செல்போனில் என்னிடம் நலம் விசாரித்தனர்,' என்றார்.

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்
(முன்னர் பூனவாலா ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட். என அறியப்பட்டது)

பதிவு அலுவலகம்: 6–வது தளம், B கட்டிடம், கங்கா ட்ரூனோ, லோஹிகான், புனே, மகாராஷ்டிரா 411014. கிளை அலுவலகம் அலகு: 1ஆவது தளம், எண் 86/11, ஆலந்தூர் சாலை. சைதாப்பேட்டை, சென்னை – 600015.

மின்–ஏலம்– விற்பனை அறிவிப்பு சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 & 9–ன் கீழ் அசையா சொத்துகளின் மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு.

இங்கே உள்ள அறிவிப்பின் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப–கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமின்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் (முன்னதாக பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது. பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயர் க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று 17 நவம்பர் 2023 தேதியிலிருந்து மாற்றப்பட்டுள்ளது (முன்னதாக மக்மா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று அறியப்பட்டது முன்னர் GE மணி ஹவுசிங் பைனான்ஸ் பய்ரிக் அன்லிமிடெட் கம்பெனி என்ற பெயருடைய நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது) (இதற்குப்பிறகு கடனீட்டு கடனீந்தோர் என்று சட்டத்தின்படி குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 பிரிவு 13(12)–ன் படியும், கடனீட்டு சொத்துகளின் உரிமை (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 & 9–ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்துள்ளார்.

கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் 03.07.2025 அன்று மின்–ஏலம் மூலமாக விற்பனை செய்யப்படும். இதன்மூலம் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்–ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள இணைப்பில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்–ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்துகொள்ள GHFL's/ கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com–ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை (மு.வி. -ல் 10%) (F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	வெற்றித் விண்ணங்கள்/ நிதிமன்ற வழக்குகள் வெற்றித்து ஏலதாரர் (K)
1	கடன் எண். HL000 281000 00005002035 பொதின்ஷா A (கடன்தாரர்), அப்துல் ரகுமான் P	அறிவிப்பு தேதி: 07.08.2024 மொத்த நிலுவை: 08.10.2024 தேதிப்படி செலுத்த வேண்டிய தொகை ரூ.1707001/– (ரூபாய் பதினேழு லட்சத்து ஏழாயிரத்து ஒன்று மட்டும்) மற்றும் தொகையைச் செலுத்தும் வரையிலான ஆண்டுக்கு @16.25% வட்டி உட்பட.	கையக	அனைத்து துண்டு மற்றும் பகுதிகள் கொண்ட நிலம் மற்றும் கட்டடம். பழைய சர்வே எண் 108/1, பட்டாப்படி புதிய சர்வே எண் 108/15, பரப்பளவு 1316 சதுர அடி. அமைவிடம் சொத்து வரி ரசீதுப்படி கதவு எண் 21/C, St–12, புதுத் தெரு, மங்கலம் கிராமம், திருக்கழுக்குன்றம் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம். எல்லைகள்: வடக்கில்: திரு. ரவி அவர்களின் வீடு மற்றும் நிலம், தெற்கில்: திரு. அண்ணாதுரை வீட்டுக்குச் செல்லும் வழிப்பாதை, கிழக்கில்: புதுத் தெரு, மேற்கில்: திரு. அண்ணாதுரை அவர்களின் வீடு மற்றும் நிலம். அளவீடு: கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம்: 20 அடி, கிழக்கு மேற்காகத் தெற்குப் பக்கம்: 36 அடி, வடக்குத் தெற்காகக் கிழக்குப் பக்கம்: 47 அடி, வடக்குத் தெற்காக மேற்குப் பக்கம்: 47 அடி.	Rs. 2957955/- (ரூபாய் இருபத்தொன்பது லட்சத்து ஐம்பத்தேழாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்தைந்து மட்டும்)	Rs. 295795.5 /- (ரூபாய் இரண்டு லட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரத்து